முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.26.02.2026

O.S No.164/2022

பி.வா.சா.1- நாகராஜன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் டிப்ளமோ வரை படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க எனக்கு தெரியும். வா.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கையில் ஏமாற்றி சொத்தை 1ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரி அது பொய் வழக்காகும். அந்த குற்றவழக்கில் என்னையும் என் மனைவி பிள்ளைகளை குற்றம்சாட்டப்பட்ட நபர்களாக காட்டப்பட்டுள்ளதென்றால் சரி. அந்தமுதல் தகவல் அறிக்கைக்கு பின்பு 2ம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திய கிரய ஆவணத்தை ரத்து செய்தேன் என்றால் சரி. பி.வா.சா.ஆ.6,10,11 ஆகிய ஆவணங்கள் இந்த வழக்கிற்கு பின்பு உற்பத்தி செய்த ஆவணங்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரிலான பி.வா.சா.ஆ.7 முதல் 11 வரை உள்ளஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றாலும் வருவாய்துறை அலுவலர்களை என் வசப்படுத்தி ஏற்படுத்திய ஆவணங்கள் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தில் அரிஸ்டம் தயாரிக்கும் கம்பெனியை நடத்தி வருவதாக சொல்வதற்கு ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் சொத்தில் வாதி 2 அடி ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லிய விவரத்திற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆக்கிரமிப்பை மீட்க வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு உரிமைப்பட்ட 25 ½ சென்ட் சொத்தை விற்றபோது 13 அடி காண்பித்து விற்றேன். அந்த 13 அடி பாதைக்கு 3 சென்ட்டுக்குள் அளவுகள் இருக்கும். 1ம் பிரதி பாதைக்கு ஏற்படுத்திய பரப்பளவு 3.360 சென்ட் என்று அவரது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

1ம் பிரதியின் எதிர்வழக்குரையில் 11வது பத்தியில் 3.360 சென்ட் பாதைக்கு விட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரி. பாதையை நீக்கி நான் விற்ற சொத்தின் பரப்பளவு 23.1 சென்ட் ஆகும். பாதைக்கு 4 சென்ட் விட்டுள்ள நிலையில் நான் எனக்கு உரிமைப்பட்டதை விட அதிக சொத்தை விற்பனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மொத்த 25 ½ சென்ட்டில் 23.1 சென்ட் விட்டது போக

மீதி இடம் பாதைக்கு விட்டுள்ளேன். பாதைக்கு போட்டு சொத்தை பிரித்து விற்று விட்டு தற்போது வாதிக்கு உரிமைப்பட்ட சொத்தை எனக்கு உரிமைப்பட்ட சொத்து என நான் விற்பனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு சொத்து கிடைத்த ஆவணத்தை ரத்து செய்ய வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

இந்த வழக்கில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டு எதிர் கோருரிமை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கு எதிராக ஏதாவது காவல்நிலையத்தில் புகாராவது வழக்காவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கடனுக்காக சொத்தை 1ம்பிரதிக்கு எழுதி கொடுத்து கடனை திருப்பி செலுத்தியவுடன் மீண்டும் என் பெயருக்கு கிரயம் பெற்ற விவரத்தை என் பதிலுரையிலோ 1ம் பிரதிவாதியின் பதிலுரையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 14 ம் பத்தியில் என்னுடைய ஆதாயத்திற்காக 1ம் பிரதியை ஏமாற்றி சொத்தை விற்பனை செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் ஏமாற்றவில்லை.

1ம் பிரதியின் புகாரின் அடிப்படையில் தாக்கல் செய்த வா.சா,ஆ.7 முதல் தகவல் அறிக்கையில் தண்ணீர் கேன் வியாபாரத்திற்காக நான் கடன் வாங்கியதாகவும் அதனை திருப்பி செலுத்தியதாகவோ சொல்லவில்லை என்றாலும் ஏமாற்றி சொத்தை விற்பனை செய்ததாக மட்டுமே சொல்லப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நானும் எனது அண்ணனும் சேர்ந்து தலா 1 சென்ட் இடத்தை பாதைக்காக வாங்கினோம். அந்த 2 சென்ட்டில் 1 சென்ட் மட்டுமே எனக்கு உரிமைப்பட்ட நிலையில் 2 சென்ட்டையும் சேர்த்து எனது கிரய ஆவணத்தில் உரிமைப்பட்டதாக காண்பித்து போலி ஆவணம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல நாங்கள் இருவரும் பாதைக்காக கிரயம் வாங்கியதால் எழுதி கொடுத்தேன்.

வழக்கு ஏ பட்டிகை சொத்து வாதிக்கு முழு உரிமைப்பட்ட சொத்து என்றாலும் பி பட்டிகை சொத்தில் சமஉரிமை வாதிக்கு உள்ளதென்றாலும் சரியல்ல. வாதிக்கு அவரது அம்மாவும் சகோதரரும் சேர்ந்து சார்பதிக அலுவலக செட்டில்மென்ட் ஆவண எண்.1304/2001ன் வாதிக்கு

வழக்கு  எ மற்றும் பி பட்டிகை சொத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரி. வழக்கு சொத்து வாதிக்கு உரிமைப்பட்டது என்பதை காண்பிக்க வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தையும் வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி ஊரில்இல்லாத சமயத்தில் வாதியின் சொத்திற்கு நான் போலி ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. உரிமையில்லாத சொத்தை விற்பனை 1ம் பிரதி கண்டுபிடித்து என்மீது புகார் கொடுத்து அதன்பேரில் நான் ஆவணத்தை ரத்து செய்தேன் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.  ஏமாற்றி வாதியின் சொத்திற்கு போலி பத்திரம் ஏற்படுத்தி அதற்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.